# ≡ தானியேல் ≡

**வேத ஆராய்ச்சி**

**அதிகாரம் 2**

தானியேல் 2 ம் அதிகாரத்தில் ராஜாவும் அவரோடு கூட இருந்த அனைவரும் மன அழுத்தத்தையும், குழப்பத்தையும் அனுபவித்தார்கள். ஆனால் தானியேலும் அவன் நண்பர்களும், அவர்களிடத்தில் தேவ சமாதானம் இருந்த படியினால் இதை எளிதாக எடுத்துக்கொண்டார்கள். அது மட்டுமல்லாமல் தானியேலும் அவர்கள் நண்பர்களும் சேர்ந்து தாங்கள் சேவிக்கிற தேவனால், இந்த குழப்பத்திலிருந்த எல்லாரையும் காப்பாற்றி ஜீவிக்கிற தேவனை பறைசாற்றுகிற ஒரு அதிகாரம் தான் இந்த 2 ம் அதிகாரம்.

## கலக்கத்தின் நித்திரை (1 - 4)

இந்த வசனங்களில் ராஜா கண்ட சொப்பனத்தின் நிமித்தம் அவனுடைய ஆவி கலங்கி நித்திரை கலைந்தது. நேபுகாத்நேச்சாராகிய இந்த ராஜா எல்லாம் உடையவராயிருந்தான். அதோடு மற்ற நாட்டு ராஜாக்களால் பெயரும் புகழும் பெற்றிருந்தும், ஒரு சொப்பனம் அவனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் பயமும் திகிலும் உண்டாக்கியது. அதாவது சொப்பனம் கண்ட அந்த ஒரே இரவில் அவனுடைய சுபாவம் மாற்றப்பட்டது. அவன் கண்ட சொப்பனம் மரண பயத்தைக்கொடுத்தது. மரணம் என்றால் யாருக்குதான் பயமில்லை இல்லையா!. தனக்குவந்த குழப்பத்திற்கு விடை கண்டுபிடிக்க சாஸ்திரிகளையும் ஜோசியரையும் சூனியக்காரரையும் கல்தேயரையும் அழைத்தான் என்பதாக வசனம் விவரிக்கிறது.

### முத்துக்கள்....

தேவன் தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார். சங்-127:2 என்று வேதம் சொல்லுகிறது. ஒருவேளை இதைப்படித்துக்கொண்டிருக்கிற அருமையான தேவபிள்ளைகளே, தேவனுக்கு பிரியமாக இருக்கிறோமா என்பதையும் நிதானித்து பார்பபோம்

இன்றும் ஆவிக்குரியவர்களாகிய நாம் திடீரென்று வரும் குழப்பத்திற்கு விடை காணும்படியாக நாசியிலே சுவாசமுள்ள மனிதரை நம்பி தாரை வார்க்கிறோமா!

கர்த்தர் தம்முடைய சித்தத்தை பலவிதங்களில் மனிதனுக்கு தெரியப்படுத்துகிறார்.

⇒ மனிதனுடன் நேரடியாக
⇒ சொப்பனத்தின் மூலமாக பேசுகிறார்
⇒ தரிசனத்தின் மூலமாக பேசுகிறார்
⇒ பரிசுத்த மனிதர்களின் உள்ளத்தில் ஏவி தீர்க்கதரிசனமாகப் பேசுகிறார்
⇒ கர்த்தர் தமது வசனத்தின் மூலமாக பேசுகிறார்
⇒ நிகழ்வுகள் மூலமாக பேசுகிறார்

## குழப்பத்தின் காலை (5- 9)

இரவில் ராஜா கண்ட சொப்பனத்தினிமித்தம் அதிகாலை அரண்மனையில் உள்ள ஒவ்வொருவருக்கும் குழப்பம். ஒருவர் கண்ட சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் விளக்குவதும் எளிதல்ல என்பது இராஜாவுக்கு தெரிந்திருந்தும், பின்பு இராஜா ஏன் இப்படியாக கேட்கிறார்? என்றால், விளக்கத்தை மாத்திரம் ராஜா கேட்டிருப்பானேயானால் ஏதாவது ஒன்றை சொல்லி ஞானிகள் தப்பியிருக்கக்கூடும். ஆனால் தேவனுடைய சித்தம் என்னவென்றால், தேவனுக்காக காத்திருக்கிற பிள்ளைகளை தேவன் வெளிக்காட்டுவதற்கு இதுவே தருணம். ஆகவே தேவன் ராஜாவுக்கு பின்பாக இருந்து காரியங்களை நடப்பித்தார்.



1. நேபுகாத்நேச்சார் ராஜ்யபாரம் பண்ணும் இரண்டாம் வருஷத்திலே, நேபுகாத்நேச்சார் சொப்பனங்களைக் கண்டான்; அதினால் அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது.
2. அப்பொழுது ராஜா தன் சொப்பனங்களைத் தனக்குத் தெரிவிக்கும்பொருட்டுச் சாஸ்திரிகளையும் ஜோசியரையும் சூனியக்காரரையும் கல்தேயரையும் அழைக்கச்சொன்னான்; அவர்கள் வந்து, ராஜசமுகத்தில் நின்றார்கள்.
3. ராஜா அவர்களை நோக்கி: ஒரு சொப்பனம் கண்டேன்; அந்தச் சொப்பனத்தை அறியவேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது என்றான்.
4. அப்பொழுது கல்தேயர் ராஜாவை நோக்கி ராஜாவே, நீர் என்றும் வாழ்க; சொப்பனத்தை உமது அடியாருக்குச் சொல்லும், அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்று சீரியபாஷையிலே சொன்னார்கள்.
5. ராஜா கல்தேயருக்குப் பிரதியுத்தரமாக: என்னிடத்திலிருந்து பிறக்கிற தீர்மானம் என்னவென்றால், நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற்போனால் துண்டித்துப்போடப்படுவீர்கள்; உங்கள் வீடுகள் எருக்களங்களாக்கப்படும்.
6. சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தெரிவித்தீர்களேயாகில், என்னிடத்தில் வெகுமதிகளையும் பரிசுகளையும் மிகுந்த கனத்தையும் பெறுவீர்கள்; ஆகையால் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்குத் தெரிவியுங்கள் என்றான்.
7. அவர்கள் மறுபடியும் பிரதியுத்தரமாக: ராஜா அடியாருக்குச் சொப்பனத்தைச் சொல்வாராக; அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்றார்கள்.
8. அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: என்னிடத்திலிருந்து தீர்மானம் பிறந்தபடியினாலே நீங்கள் காலதாமசம் பண்ணப்பார்க்கிறீர்களென்று நிச்சயமாக எனக்குத் தெரியவருகிறது.

www.tamilarticle.com

## முத்துக்கள்....

முதலாம் அதிகாரத்திலே நாம் பார்க்கும் பொழுது தன்னை தீட்டுபடுத்தக்கூடாது என்று தேவனுக்காக பக்தி வைராக்கியம் பாராட்டிய தானியேலை தேவன் உயர்த்துகிற நேரமிது...

பிரச்சனைகளின் மத்தியில் சோர்ந்து போகாதீர்கள். தேவன் உங்களை உயர்த்துகிற நேரம்.. அல்லேலுயா!.

## தேவ சமாதானத்தை காத்துக்கொண்ட தானியேல் (தானி 2:10-17)

கல்தேயர் ராஜாவினிடத்தில் மனுஷனால் முடியாத இப்படிப்பட்ட காரியத்தை எந்த ராஜாவும் இதற்குமுன் இதை சாஸ்திரியினிடத்திலாவது ஜோசியனிடத்திலாவது கல்தேயனிடத்திலாவது கேட்டதில்லை. நீரோ இதை கேட்கிறீர் என்றனர். ஆகவே ராஜாவுக்கு மறு உத்தரவு கொடுப்பதற்கு தங்களால் முடியாது என்பதை அவர்களே ஏற்றுக்கொள்கின்றனர். அதோடு அவர்கள் தேவனே இதற்கு மறு உத்தரவு தர முடியும் என்பதையும் சரியாய் சொன்னார்கள்.

இவ்வாறு மறுஉத்தரவு கொடுக்க இயலாமையில், எல்லாரும் மரணத்துக்கு பக்கத்திலிருக்கையில் தேவ பிள்ளைகளான தானியேலும் அவன் நண்பர்களும் அதில் உள் அடங்கும். இந்த சூழ்நிலையில் தானியேலுக்கும் அவன் நண்பர்களுக்கும் கொஞ்சமும் பயம் இல்லை. காரணம் இவர்கள் ஜீவனுள்ள தேவனை அறிந்திருந்து தேவபிரசன்னத்திற்குள் தங்களை காத்துக்கொண்டபடியினால் தேவ சமாதானம் அவர்களுக்குள் இருந்தது.

சடிதியான திகிலும், துஷ்டர்களின் பாழ்க்கடிப்பும் வரும்போது நீ அஞ்ச வேண்டாம்.(நீதி 3:25) வசனத்தின் படி இந்த பிரச்சனையை சமாதானத்தோடும் பொறுமையோடும் கையாண்டான் தானியேல்.

## முத்துக்கள்....

ஒருவேளை பிரச்சனைகளும், நெருக்கங்களும் உங்களை சுற்றி வருகிறதா? தேவ சமாதானத்தை காத்துக்கொள்ளுங்கள்.

## பிரச்சனையில் கைகொடுக்கிற ஜெபக்கூட்டம் (தானி 2:18-19)

தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாதபடிக்கு, அன்று இந்த மறைபொருளைக் குறித்துப் பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கிறதற்காக, தானியேல் தனது நண்பர்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ இவர்களை ஜெபிக்க கேட்டுக் கொண்டான். ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பது மிகவும் அவசியம். அதுவும் சோதனை காலத்தில் நம்மை தப்புவிக்கும் ஆயுதம் ஜெபமே.

## முத்துக்கள்....

ஜெபம் ஜெயம் என்றும், முளையினால் முடியாதது முழங்காலில் முடியும் என்றும் அநேக வல்லமை வார்த்தைகளை கேட்டிருக்கிறோம். ஆனாலும் பிரச்சனைகளுக்கு மத்தியில் ஜெபிக்கிறவர்கள் குறைவுதான். அநேகர் தேவனிடத்திற்கு போவதற்கு பதிலாக மனிதர்களிடத்தில் போகிறார்கள்.

ஜெபம் என்பது நம்முடைய தேவைகளை தேவனிடத்தில் கேட்பது. ஜெபிக்கிறவர்களிடத்தில் விசுவாசமும் காணப்படும்.

தானியேலோ இராஜாவினிடத்தில் அல்ல, தேவனிடத்தில் மன்றாடினான். ஆகவே பதில் கிடைத்தது.

## துதியும் கனமும் தேவனுக்கே (தானி 2:19-23)

வாழ்க்கையின் நெருக்கமான நேரத்திலிருந்த அதாவது தானியேல் மற்றும் அவன் நண்பர்களோடு கூட ஞானிகளையும் நேபுகாத்நேச்சார் உயிர் வாங்க துடித்துக் கொண்டிருக்கும் போது மனிதரால் நினைப்பதற்கும் செய்வதற்கும்

9. காலம் மாறுமென்று நீங்கள் எனக்கு முன்பாகப் பொய்யும் புரட்டுமான விசேஷத்தைச் சொல்லும்படி எத்தனம்பண்ணி இருக்கிறீர்கள்; நீங்கள் சொப்பனத்தை எனக்குத் தெரிவிக்காமற்போனால், உங்களெல்லாருக்கும் இந்த ஒரே தீர்ப்பு பிறந்திருக்கிறது; ஆகையால் சொப்பனத்தை எனக்குச் சொல்லுங்கள்; அப்பொழுது அதின் அர்த்தத்தையும் உங்களால் காண்பிக்கக்கூடுமென்று அறிந்துகொள்ளுவேன் என்றான்.

10. கல்தேயர் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக: ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கத்தக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை; ஆகையால் மகத்துவமும் வல்லமையுமான எந்த ராஜாவும் இப்படிப்பட்ட காரியத்தை ஒரு சாஸ்திரியினிடத்திலாவது ஜோசியனிடத்திலாவது கல்தேயனிடத்திலாவது கேட்டதில்லை.

11. ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது; மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம்பண்ணாத தேவர்களேயொழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள்.

12. இதினிமித்தம் ராஜா மகா கோபமும் உக்கிரமுங்கொண்டு, பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலைசெய்யும்படி கட்டளையிட்டான்.

13. ஞானிகளைக் கொலைசெய்ய வேண்டுமென்கிற கட்டளை வெளிப்பட்டபோது, தானியேலையும் அவன் தோழரையும் கொலைசெய்யத் தேடினார்கள்.

14. பாபிலோனின் ஞானிகளைக் கொலைசெய்யப் புறப்பட்ட ராஜாவினுடைய தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியோகோடே தானியேல் யோசனையும் புத்தியுமாய்ப் பேசி: 15. இந்தக் கட்டளை ராஜாவினால் இத்தனை அவசரமாய்ப் பிறந்ததற்குக் காரணம் என்ன என்று ராஜாவின் சேர்வைக்காரனாகிய ஆரியோகினிடத்தில் கேட்டான்; அப்பொழுது ஆரியோகு தானியேலுக்குக் காரியத்தை அறிவித்தான்.

16. தானியேல் ராஜாவினிடத்தில் போய், சொப்பனத்தின் அர்த்தத்தை ராஜாவுக்குக் காண்பிக்கும்படித் தனக்குத் தவணைகொடுக்க விண்ணப்பம்பண்ணினான்.

17. பின்பு தானியேல் தன் வீட்டுக்குப்போய், தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாதபடிக்கு இந்த மறைபொருளைக்குறித்துப் பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கிறதற்காக,

அப்பாற்பட்ட காரியங்களை தேவனே செய்த படியினால் அந்த கனத்தையும் துதியையும் தேவனுக்கு கொடுக்கிறான்.

### முத்துக்கள்....

துதி தேவனுக்குரியது.

துதி சுயத்தை வெறுக்கச்செய்யும்.

துதிக்கிறவனுக்கு தேவ பெலன் தானே வரும். அவைகள் மலைகளை பெயர்க்கும். சத்துருவை விரட்டும்.

துதிக்கிற நாம் துதிப்பது கட்டாயம் என்று உதட்டு அளவில் துதிக்கிறோமா? இல்லை நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து நம்முடைய தேவன் செய்த நன்மைகளை நினைத்து துதிக்கிறோமா? சிந்தித்துப் பாருங்கள். நம்முடைய துதி எப்போதும் நம் இருதயத்தின் ஆழத்திலிருந்து வர வேண்டும்.

### தானியேல் - சொப்பனத்தின் மொழிபெயர்ப்பாளர் (தானி 2:25-28)

இன்றும் மனிதனுக்கு வெளியாக்கப்படாத எத்தனையோ இரகசியங்கள் உண்டு என்பது சரிதானே.. மற்றவர்களின் சொப்பனத்தை கூறுவது மனிதனுக்கு சாத்தியமா? இல்லவே இல்லை.. தானியேல் ராஜாவினிடத்தில் வரும் பொழுது சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் உன்னால் சொல்ல முடியுமா? என்ற இந்த கேள்வி எளிதானதல்ல. உதாரணமாக ஒருவர் தனது மனதில் நினைத்த ஒரு கேள்வியையும் பதிலையும் சொல் என்று நம்மோடு வினவினால், இது நமக்கு எளிதோ!

தானியேலோ, ராஜா கேட்கிற மறை பொருளை ராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறிசொல்லுகிறவர்களாலும் கூடாது என்று உறுதியாக சொல்லுவதற்கு காரணம், அவனுக்கும் ஜீவனுள்ள தேவனுக்கும் உள்ள தொடர்பு சரியாக இருந்த படியினால் தேவனை தவிர வேறு யாராலும் இதன் அர்த்தத்தை சொல்ல முடியாது “ஆனால்” பரலோகத்தின் தேவன் தாமே என்று முடித்தார். பவுல் சொல்வதுபோல் நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். (2கொரி 4:5)

ராஜா கேட்காத மற்றொரு கேள்விக்கும் தானியேல் அவனுடைய ஆவி ஆத்துமா சரீரம் புல்லரிக்கும் வண்ணமாக ஒரு காரியத்தை சொன்னான் அது என்ன தெரியுமா? இந்த சொப்பனம் ஏன் உமக்கு கொடுக்கப்பட்டது என்றால், இனி இந்த உலகத்தில் என்ன சம்பவிக்கும் என்ற சிந்தை நீர் படுக்கையில் படுத்திருக்கும் போது எழும்பினபடியினால் தேவன் இந்த சொப்பனத்தின் மூலமாக உம்மோடு இடைபட்டார் என்றார்.

### முத்துக்கள்....

இன்று புதிதாய் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் மற்ற தேவர்களைப்போல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் ஒன்றுதான் என்று நினைத்துவிடக்கூடாது. அவர் சர்வவல்லமையுள்ள தேவன்.

ஞானிகளையும், ஜோசியரையும், சாஸ்திரிகளையும், குறிசொல்லுகிறவர்களையும் நம்பி உங்கள் வாழ்க்கையை கெடுக்காதீர்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே உங்கள் வாழ்க்கையின் ஆதியையும் அந்தத்தையும் அறிந்திருக்கிறார்.

தேவ ஊழியக்காரர்களே, தேவனுடைய கரத்தில் நாம் ஒரு கருவிதான் என்பதை மறந்து இழிவான இச்சைகளுக்குள் சிக்கிவிடாதீர்கள். பிசாசு பயன்படுத்தும் கண்ணி அது.

தேவன் ஊழியக்காரன் மூலமாக ஒருவருக்கு இடைபடும்போது ஆவி ஆத்துமா சரீரத்தில் ஒரு தொடுதலை உணரமுடியும்.

18. அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக் காரியத்தை அறிவித்தான்.
19. பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது; அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்திரித்தான்.
20. பின்பு தானியேல் சொன்னது: தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக; ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது.
21. அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.
22. அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.
23. என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன் என்றான்.
24. பின்பு தானியேல் பாபிலோனின் ஞானிகளை அழிக்க ராஜா கட்டளையிட்ட ஆரியோகினிடத்தில் போய்: பாபிலோனின் ஞானிகளை அழிக்காதேயும், என்னை ராஜாவின் முன்பாக அழைத்துக்கொண்டுபோம்; ராஜாவுக்கு அர்த்தத்தைத் தெரிவிப்பேன் என்று சொன்னான்.
25. அப்பொழுது ஆரியோகு தானியேலை ராஜாவின் முன்பாகத் தீவிரமாய் அழைத்துக்கொண்டுபோய்: சிறைப்பட்டுவந்த யூதேயா தேசத்தாரில் ஒரு புருஷனைக் கண்டுபிடித்தேன்; அவன் ராஜாவுக்கு அர்த்தத்தைத் தெரிவிப்பான் என்றான்.
26. ராஜா பெல்தெஷாத்சாரென்னும் நாமமுள்ள தானியேலை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் நீ எனக்கு அறிவிக்கக்கூடுமா என்று கேட்டான்.
27. தானியேல் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக: ராஜா கேட்கிற மறைபொருளை ராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறிசொல்லுகிறவர்களாலும் கூடாது.

## சொப்பனம் வெளியாக்கப்பட்டது (தானி 2:29-45)

உலோகங்கள் - தங்கம், வெள்ளி, பித்தளை, இரும்பு இவைகளின் விலை குறைந்து கொண்டே வருவதை பார்க்க முடியும். அப்படியென்றால் ஒருவருக் கொருவர் மகிமை குறைந்து வருவதை நாம் பார்க்க முடியும்.

இதே அர்த்தத்தில் மற்ற இரண்டு சம்பவங்களும் வேத வசனத்தில் உண்டு தானி 7:23-24 மற்றும் வெளி 17:12-ல் நாம் பார்க்கலாம்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய அனுமதியின் பிற இனத்து (ஆட்சியாளர் களால்) அடிமை கொள்ளப்பட்டு ஒடுக்கப்படுவார்கள். அந்த அரசு நிறை வடையும் காலத்தில் தேவனுடைய நித்திய அரசு நிறுவப்படும்.




28. மறைபொருள்களை வெளிப்
படுத்துகிற பரலோகத்திலிருக்கிற
தேவன் கடைசிநாட்களில் சம்ப
விப்பதை ராஜாவாகிய நேபுகாத்
நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார்;
உம்முடைய சொப்பனமும் உமது
படுக்கையின்மேல் உம்முடைய
தலையில் உண்டான தரிசனங்
களும் என்னவென்றால்:
29. ராஜாவே, உம்முடைய படுக்
கையின்மேல் நீர் படுத்திருக்கை
யில், இனிமேல் சம்பவிக்கப்போகிற
தென்ன என்கிற நினைவுகள் உம
க்குள் எழும்பிற்று; அப்பொழுது
மறைபொருள்களை வெளிப்படுத்து
கிறவர் சம்பவிக்கப்போகிறதை உம
க்குத் தெரிவித்தார்.
30. உயிரோடிருக்கிற எல்லாரைப்
பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம்
உண்டென்பதினாலே அல்ல; அர்த்
தம் ராஜாவுக்குத் தெரியவரவும்,
உம்முடைய இருதயத்தின் நினை
வுகளை நீர் அறியவும், இந்த
மறைபொருள் எனக்கு வெளியாக்
கப்பட்டது.
31. ராஜாவே, நீர் ஒரு பெரிய
சிலையைக் கண்டீர்; அந்தப் பெ-
ரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ள
தாயிருந்தது; அது உமக்கு எதிரே
நின்றது; அதின் ரூபம் பயங்கரமா
யிருந்தது.
32. அந்தச் சிலையின் தலை பசும்
பொன்னும், அதின் மார்பும் அதின்
புயங்களும் வெள்ளியும், அதின்
வயிறும் அதின் தொடையும் வெண்
கலமும்,
33. அதின் கால்கள் இரும்பும்,
அதின் பாதங்கள் பாதி இரும்பும்
பாதி களிமண்ணுமாயிருந்தது.
34. நீர் பார்த்துக்கொண்டிருக்கும்
போதே, கைகளால் பெயர்க்கப்
படாத ஒரு கல் பெயர்ந்து உருண்
டுவந்தது; அது அந்தச் சிலை
யை இரும்பும் களிமண்ணுமாகிய
அதின் பாதங்களில் மோதி, அவை
களை நொறுக்கிப்போட்டது.
35. அப்பொழுது அந்த இரும்பும்
களிமண்ணும் வெண்கலமும் வெள்
ளியும் பொன்னும் ஏகமாய் நொ-
றுங்குண்டு, கோடைகாலத்தில்
போரடிக்கிற களத்திலிருந்து பறந்
துபோகிற பதரைப்போலாயிற்று;
அவைகளுக்கு ஒரு இடமும் கிடை
யாதபடி காற்று அவைகளை அடித்
துக்கொண்டுபோயிற்று; சிலையை
மோதின கல்லோவென்றால், ஒரு
பெரிய பர்வதமாகி பூமியையெல்
லாம் நிரப்பிற்று.
36. சொப்பனம் இதுதான்; அதின்
அர்த்தத்தையும் ராஜசமுகத்தில்
தெரிவிப்போம்.

## தலை பசும் பொன் (பாபிலோனிய பேரரசு)

யூதா நாடு கி.மு 606 முதல் கி.மு 538 வரை நேபுகாத் நேச்சாரால் முற்றுகை யிடப்பட்டு அடிமைபடுத்தப்பட்டது.

## மார்பும் அதின் புயங்களும் வெள்ளி (மேதியா– பெர்சியா இரட்டை பேரரசு)

கி.மு 538 முதல் கி.மு 330 வரை இரட்டை பேரரசு வலுப்பெற்று பாபிலோனியப் பேரரசை வீழ்த்தி அவர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்த இஸ்ரவேலரையும் ஒடுக்கி ஆட்சி செய்தனர்.

## வயிறும் அதின் தொடையும் வெண்கலம் (கிரேக்கப் பேரரசு)

மேதியா பெர்சியா அரசு வலுவிழந்த பின், கி.மு 330 முதல் கி.மு 168 வரை கிரேக்க பேரரசு வல்லரசாக உருவெடுத்தது. இவர்கள் இஸ்ரவேலரை ஒடுக்கினர். சரித்திர புகழ் பெற்ற பேரரசர் அலெக்ஸாண்டர் காலத்தில் உலகின் வல்லரசாக இருந்தது.

## கால்கள் இரும்பு (ரோமப் பேரரசு)

கி.மு 168-முதல் கி.பி 476 வரை வல்லரசாக உருவெடுத்து கி.பி 5-ம் நூற்றாண்டு வரை இதன் ஆளுகை தொடர்ந்தது. இப்பேரரசு இஸ்ரவேலரை ஒடுக்கி எருசலேம் தேவாலயத்தை தரைமட்டமாக்கியது. யூதர்களை துரத்தி மீண்டும் நாடு திரும்பாமல் செய்தது. கி.பி 70-ம் ஆண்டில் தங்கள் சுயதேசத்தை விட்டு உலகின் பல நாடுகளில் அகதியாக சென்றனர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் இந்த காலத்தில் தான் பிறந்தார்.

## பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணும்(புதிய பாபிலோனிய பேரரசு)

உலக அரசின் முடிவு காலத்தில் தற்போது மறைந்திருக்கும் பாபிலோனிய பேரரசு புதிய வல்லரசாக உருப்பெற்று ஆட்சி புரியும். இப்பேரரசு முந்தைய ரோமப் பேரரசின் புதிய உயிர்ப்பாக இருக்கும். இந்த காலக்கட்டத் தில்தான் அந்திக் கிறிஸ்து (எதிர் கிறிஸ்துவின்) காலம் இருக்கும். இந்தக் ஆட்சியில் இஸ்ரவேலர் இதுவரை எந்த பேரரசாலும் இல்லாத மிகுந்த துன்பத்தை அடைவார்கள். மத் 24:21; வெளி 6:17; 7:14. இதற்கு பிற்பாடு ஆண்டவரால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தேவன் நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்.

## குறிப்பு

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய அனுமதியின் படி 7 பிற இனத்து (ஆட்சியாளர்களால்) அடிமை கொள்ளப்பட்டு ஒடுக்கப்படுவார்கள் என்பது தேவ நியதி. இதில் 6 அரசுகளின் ஆட்சி காலங்கள் முடிந்து விட்டது. இன்னும் ஒரு அரசு தோன்ற வேண்டும். அவைகளின் ஆட்சி காலத்தில் இஸ்ரவேலர்கள் ஒடுக்கப்படுவார்கள். அந்த அரசு நிறைவடையும் காலத்தில் தேவனுடைய நித்திய அரசு நிறுவப்படும்.

**எகிப்தின் பேரரசு:** பார்வோன்கள் என்னும் எகிப்தின் அரசால் இஸ்ரவேலர்கள் 430 ஆண்டு அடிமைகளாக்கப்பட்டனர்.

**அசீரிய பேரரசு:** அசீரிய அரசர்களால் கி.மு 722-ல் இஸ்ரவேல் நாடு அடிமை கொள்ளப்பட்டது.

## வெளிப்படுத்தப்படாத ரகசியம் வெளிப்படுத்தப்பட்டது (தானி 46-49)

அவருடைய நாமத்தை அறிந்திருந்த படியால் உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன் என்று பரிசுத்த வேதாகமம் சொல்லுவதைப்போல், அன்று தானியேல் சிறைபிடிக்கப்பட்ட அந்நிய நாட்டில் தேவன் அவனை பிரகாசிக்கச் செய்தார். சொப்பனமும் அதன் மறைபொருளையும் கேட்ட ராஜா செய்வது அறியாது முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி, மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும் என்று ஒத்துக்கொள்வதை நாம் பார்க்கமுடியும். கர்த்தரை நம்புகிறவன் செழிப்பான் என்ற வசனத்தின்படி தானியேல் மற்றும் அவனது நண்பர்களில் பதவி உயர்வுகளை நாம் பார்க்கலாம்.

37. ராஜாவே, நீர் ராஜாதி ராஜாவாயிருக்கிறீர்; பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார்.

38. சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே. 39. உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும்.

40. நாலாவது ராஜ்யம் இரும்பைப்போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்ன பின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப்போடுகிற இரும்பைபோல அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப் போடும்.

41. பாதங்களும் கால்விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும்; ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரு-ம்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும்.

42. கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால், அந்த ராஜ்யம் ஒரு பங்கு உரமும் ஒருபங்கு நெரிசலுமாயிருக்கும்.

43. நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங் கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள்.

44. அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

## கடைசியாக இந்த அதிகாரத்திலிருந்து நாம் அறிந்துகொள்வது

இந்த அதிகாரத்தில் நாம் கற்றுக்கொண்டதின் இரத்தின சுருக்கம் என்னவென்றால், நேபுகாத்நேச்சார் தன்னுடைய படுக்கையின்மேல் படுத்திருக்கையில், **இனிமேல் சம்பவிக்கப்போகிறதென்ன என்கிற நினைவுகள்** தனக்குள் எழும்பினதற்கு பரிகாரமாகத்தான் இந்த சொப்பனம் அவருக்கு அருளப்பட்டது. அந்த சொப்பனத்தின் இரத்தின சுருக்கமான அர்த்தம் என்னவென்றால் ஒரு ராஜ்யத்திற்கு பின்பு அதனின்றும் பெலவீனமான இராஜ்யம் தோன்றி முடிவில் பரலோகத்தின் தேவன் என் றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த இராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கி தேவ ராஜ்யம் நிலைநிற்கும் என்பதுவே.

நேபுகாத்நேச்சார் சொப்பனத்தையும் அதின் மறைபொருளையும் அறிந்தாலும் நித்தியத்திற்குதக்கதாக அவனுடைய வாழ்க்கை மாற்றப்படவில்லை என்பது உண்மையே!

பதவிகளும், சிங்காசனங்களும் அழிவை நோக்கி தான் இருக்கிறது என்பதையும் நியாயத்தீர்ப்பு அதற்கு பின்பாக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை யும் கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்திருக்கிறோம். அது சந்தோஷமே.... ஆனால் நித்தியஜீவனுக்காக நம்முடைய வாழ்க்கை மாற்றப்படவேண்டியது அவசியம் என்பதை இந்த அதிகாரத்திலிருந்து நாம் அறிந்து கொள்ள உங் களை வாஞ்சிக்கிறேன்.

போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவை களைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.
(1கொரி 3:11-13)

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

www.tamilarticle.com

45. இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான்.
46. அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி, அவனுக்குக் காணிக்கை செலுத்தவும் தூபங்காட்டவும் கட்டளையிட்டான்.
47. ராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான்.
48. பின்பு ராஜா தானியேலைப் பெரியவனாக்கி, அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக் கொடுத்து, அவனைப் பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின்மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான்.
49. தானியேல் ராஜாவை வேண்டிக்கொண்டதின்பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்துக் காரியங்களை விசாரிக்கும்படி வைத்தான்; தானியேலோவென்றால் ராஜாவின் கொலுமண்டபத்தில் இருந்தான்.